DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 283/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. 2. P.W.1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மணிகண்டன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | கோவிந்தராஜ் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 09.03.2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது எங்க இருக்கீங்க மடத்துக்குளம் நெடுஞ்சாலைரோந்து பிரிரிவல் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன் உடுமுலை காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணியில் இருந்த போது கடநத் 15 .03.2025 ம் தேதி நானும் சிறப்பு உதவி ஆய்வாளர் ஜனகராஜன், மற்றும் உதவியாளர் மது விலக்கு குற்றங்களை தடுக்க ரோந்து போன போது காலை 7.00 மணியளவில் ரகசிய தகவல் உதவி ஆய்வாளருக்கு கிடைத்து பின்னிட்டு டவர் டாஸ்மார்க் கடை அருகில் மது பானம் விற்பதாக தகவல் கிடைத்து 7.00 மணிக்கு அங்கு சென்றோம். அ ப்போது இரண்டு நபர்கள் ஒரு நபரிடம் ஏதோ வாங்கி கொண்டிருந்ததாகவும், எங்களை பார்த்ததும் அந்த இரு நபர்கள் ஓடி விட்டார்கள் .கையில் பையுடன் இருந்த ஒரு நபரை பிடித்து விசாரித்த போது அவர் பெயர் காட்டுராஜா த/பெ. சண்முகம் காட்டனூர் சிவகங்கை மாவட்டம் என்று சொன்னவரிடம் அவரிடம் 7 Express பிராந்தி பாட்டில்கள் இருந்தது 180Ml அளவுள்ள பிராந்தி பாட்டில்களை விலைக்கு விற்பனை செய்வதற்கு வைத்திருந்ததாக அவரே ஒப்பு கொண்டார். உதவி ஆய்வாளர் மேற்படி பிராந்தி பாட்டில்களை கைப்பற்றி கைப்பற்றுதல்

மகசரில் கைப்பற்றினார். பொது ஜன சாட்சிகள் முன் வராததால் நானும் சிறப்பு உதவி ஆய்வாளர் ஜனகராஜன் என்பவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டடப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள *2* வது கையெழுத்து என்னுடையது தான். **கைப்பற்றுதல் மகசர் அசா.ஆ.*1* என குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கு சொத்துக்களுடன் எதிரியை காவல்நிலையத்தை அழைதது வந்து பின்னர் எதிரியின் மீது குற்ற எண் 153/2025 ச/பி. 4(1) C TNP–Amendment Act ன் படி உதவி ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கை தயார் செய்தார். அதற்கு நாங்கள் உதவியாக இருந்தோம். காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் உடுமலை பஸ் ஸ்டாண்டில் இருந்து 500 மீட்டர் தொலைவில் தான் இருக்கும் என்றால் சரிதான். அந்த இடம் ஆள் நடமாட்டம் அதிகமாக உள்ள இடம் என்றால் ஆமாம். நீங்கள் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் காலை 07.00 மணி என்றால் சரிதான். நீங்கள் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை தாக்கல் செய்துள்ளார் என்றாலும் அதற்கு ஆதரவாக நீங்கள் பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றாலும் சரி அல்ல. சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் எதிரிகளுக்கும் வழக்கத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் இல்லை. உண்மையில் சம்பவம் நடைபெற்றிருந்தால் பொதுமக்களை சாட்சிகளாக போட்டிருப்பீர்கள் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala ., B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.